தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள். 12.05.2026

## முன்னிலை
## திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)
## மாநில தகவல் ஆணையர்

*****

## வழக்கு எண். CP 4900/F/2025

திரு.A.ரவிச்சந்திரன், -- புகார்தாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
எண்.33I/95 கோட்ராம்பாளையம் தெரு, -- பொது அதிகார அமைப்பு
(Old Employment Office),
இரங்கசாமி குளம் அருகில்,
காஞ்சிபுரம் மாவட்டம்-631 501.

## ஆணை

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (12.05.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் திரு.A.ரவிச்சந்திரன், அவர்கள் ஆஜராகவில்லை. மேலும் மனுதாரர் 08.05.2026 தேதியிட்டு ஆணையத்திற்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தனக்கு இருதய சிகிச்சை காரணமாக நேரடி விசாரணைக்கு ஆஜராக இயலவில்லை என்றும், தனக்கு உரிய தகவல்களை பெற்றுத் தருமாறும் ஆணையத்திடம் கோரியுள்ளார். பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத் தகவல் அலுவலர், திரு.நா.பாஸ்கரன், மேற்பார்வையாளர்/ வரைவாளர் நிலை-2, மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், கோட்ராம்பாளையம் தெரு, காஞ்சிபுரம் மாவட்டம்-631 501 அவர்கள் ஆணையத்தின் முன் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரர் 12.04.2025 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், “அங்கீகார எண்.218/2011-க்கான அணுகு சாலை DTCP அங்கீகார எண்.39/2007-ல் உள்ளது என்ற DTCP நிர்வாகத்தின் முடிவு சட்டத்திற்குட்பட்டதா என்பதை மேற்க்கோள்களுடன் சான்றிட்ட தகவலாக வழங்கிடவும்” என்பன போன்ற தகவல்களை 2 இனங்களில் வழங்கக் கோரி

பொதுத் தகவல் அலுவலர், DTCP துணை இயக்குநரகம், காஞ்சிபுரம் மாவட்டம் அவர்களுக்கு மனு தாக்கல் செய்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து தகவல்கள் வழங்காத காரணத்தால் 20.05.2025 தேதியிட்டு பிரிவு 19(1)-ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலருக்கு அனுப்பியுள்ளார். அம்மனுவைப் பெற்ற மேல்முறையீட்டு அலுவலர்/ துணை இயக்குநர்(பொ), மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், கோட்ராம்பாளையம் தெரு, காஞ்சிபுரம் மாவட்டம்-631 501 அவர்கள் ந.க.எண்.2163/2024-2, கா.மா.2, நாள் 08.08.2025 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு இனம் வாரியாக தகவல்கள் வழங்கியுள்ளார். அதன் பின்னர் மனுதாரர் மேல்முறையீட்டு அலுவலரிடமிருந்து முழுமையான தகவல்கள் வழங்காத காரணத்தால் 19.10.2025 தேதியிட்டு பிரிவு 18(1)-ன் கீழ் புகார் மனுவினை இவ்வாணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். இப்புகார் மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு 12.05.2026 முற்பகல் இவ்வாணையத்தில் வைத்து நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மனுதாரர் கோரிய தகவல்கள் மேல்முறையீட்டு அலுவலரால் ந.க.எண்.2163/2024-2, கா.மா.2, நாள் 08.08.2025 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக இனம் வாரியாக தகவல்கள் ஒப்புகை அட்டையுடன்கூடிய பதிவஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவித்து அதன் நகலை இணைத்து ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணையின் முடிவில், மனுதாரர் கோரிய தகவல்கள், அவருக்கு வழங்கப்பட்ட தகவல்கள் ஆகியவற்றை ஆணையம் பரிசீலனை செய்கையில், மனுதாரருக்கு உரிய, தகவல்கள் மேல்முறையீட்டு அலுவலரால் ந.க.எண்.2163/2024-2, கா.மா.2, நாள் 08.08.2025 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக வழங்கப்பட்டுள்ளதை ஆணையம் பதிவு செய்து ஏற்றுக்கொள்கிறது. இதுகுறித்து மனுதாரரின் கருத்துக்களையும், வாதங்களையும் தெரிவிக்க அவருக்கு வாய்ப்பளிக்கப்பட்டிருந்தும் அவர் இன்றைய விசாரணைக்கு (12.05.2026) ஆஜராகத் தவறியுள்ளார். **எனவே, இப்புகார் மனுவின் மீதான விசாரணையை இத்துடன் முற்றாக்கம் செய்து, பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் கீழ்க்கண்ட உத்தரவினைப் பிறப்பிக்கின்றது.**

- **மனுதாரரின் 12.04.2025 தேதியிட்ட தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழான மனுவிற்கு உரிய காலத்திற்குள் (30 தினங்களுக்குள்) தகவல்களை வழங்காததற்காக அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் திரு.உமாபதி, மேற்பார்வையாளர், வரைவாளர் நிலை-II. மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், காஞ்சிபுரம் மாவட்டம் அவர்கள் மீது ஏன் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 20 (1) மற்றும் 20(2)-ன் கீழ் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கான எழுத்துமூல விளக்கத்தினை இவ்வாணையத்திற்கு 17.06.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு அப்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது. மேலும் அன்றைய தினம் தற்போதைய பொதுத் தகவல் அலுவலரும் ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகுமாறு ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது.**

- **மனுதாரரின் 20.05.2025 தேதியிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவிற்கு உரிய காலத்திற்குள் தகவல்களை வழங்காததற்காக அப்போதைய மேல்முறையீட்டு அலுவலர் (20.05.2025 தேதிய), துணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், இரங்கசாமிகுளம் அருகில்,**

**காஞ்சிபுரம் மாவட்டம்-631 501 அவர்கள் மீது ஏன் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 20(2)-ன் கீழ் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கான எழுத்துமூல விளக்கத்தினை இவ்வாணையத்திற்கு 17.06.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு அப்போதைய மேல்முறையீட்டு அலுவலருக்கு ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

**ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். CP 4900/F/2025</u>**

**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
எண்.33I/95 கோட்ராம்பாளையம் தெரு,
(Old Employment Office),
இரங்கசாமி குளம் அருகில்,
காஞ்சிபுரம் மாவட்டம்-631 501.

**அப்போதைய பொதுத் தகவல் அலுவலர்**
**திரு.உமாபதி,**
**மேற்பார்வையாளர், வரைவாளர் நிலை-II,**
**மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,**
**காஞ்சிபுரம் மாவட்டம்.**

***(தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் வாயிலாக)***

**அப்போதைய மேல்முறையீட்டு அலுவலர் (20.05.2025 தேதிய),**
**துணை இயக்குநர்,**
**மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,**
**இரங்கசாமிகுளம் அருகில்,**
**காஞ்சிபுரம் மாவட்டம்-631 501.**
***(தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் வாயிலாக)***

**<u>புகார்தாரர்</u>**

திரு.A.ரவிச்சந்திரன்,
எண்.1B, கிருஷ்ணா ரோடு,
கானான் அபார்ட்மெண்ட்,
புதுப்பெருங்களத்தூர்,
சென்னை-600 063.

**<u>நகல்</u>**

இயக்குநர்,
நகர மற்றும் கிராம திட்டமிடல் இயக்குநர் அலுவலகம்,
2வது, 3வது மற்றும் 4வது தளம்,
E&C மார்க்கெட் சாலை,
கோயம்பேடு, சென்னை-600 107.

பதிவாளர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
சென்னை-35.(For follow up)

Copy to: File NS/PA-